දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி அமைச்சு

Ministry of Education

ඉසුරුපාය, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

පාසල් කටයුතු හා පෞද්ගලික පාසල් ශාඛාව


ඔබේ අංකය / உமது இல. / Your No.: ..............................

මගේ අංකය / எமது இல. / My No.: ED/01/12/07/04/01-2013

දිනය / திகதி / Date: 2013.04 .11

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பி.க.ப. / உ.க.ப.கள்
சகல அதிபர்கள்.

## ஆசிரியர் மற்றும் அதிபர் மதிப்பீடு

பயன்மிக்க பண்புசார் கல்வியின்பால் ஆசிரியர், அதிபர்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் இவ்வாண்டும் உலக ஆசிரியர் தினத்தை ஒட்டியதாக தேசிய மட்டத்தில் ஆசிரியரகள் மற்றும் அதிபர்களுக்கிடையிலான மதிப்பீட்டினை மேற்கொண்டு கௌரவிக்கும் நிகழ்வினை 2013 ஒக்ரோபர் மாதத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைக்கு ஏற்புடையதாகத் தகுதிவாய்ந்த ஆசிரியர், அதிபர்களுக்கு கௌரவிப்பினை வழங்குவதன் பொருட்டு மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்படுவதற்கான நியதிகள் அடங்கிய 2011/23 ஆம் இலக்க சுற்றுநிருபமும் அதன் திருத்தங்கள் ,அடங்கிய சுற்றறிக்கைக் கடிதங்களும் இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இந்த அறிவுறுத்தல்களை நன்கு விளங்கி அங்கு காட்டப்பட்டுள்ள கால அட்டவணைக்கேற்ப தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியலை உரிய நிறுவனத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கருணையுடன் அறியத்தருகின்றேன்.

உரிய சுற்றறிக்கை விதிமுறைகளுக்கேற்ப ஒழுங்கு முறையாகக் விருது பெறுநர்களை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு மேலும் கேட்டுக்கொள்கின்றேன். இதன்படி 2011.06.24 ஆந் திகதிய 2011/23 ம் இலக்க சுற்றறிக்கையின் கீழ்க்குறிப்பிடப்படும் திருத்தங்கள் மட்டும் செய்யப்பட்டுள்ளதோடு ஏனைய பந்திகளில் எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

2011/23 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கீழ்வரும் உபபிரிவுகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் இத்திருத்தங்களிற்கேற்ப விருதுபெறுநர்கள் தேர்வுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

- பாடசாலையொன்றில் சேவையாற்றும் ஆசிரியர்களிடையே விருது பெறுவதற்குத் பொருத்தமான, தகுதிகளுடனான ஆசிரியர்களுடைய விண்ணப்பங்களை மட்டும் இதன்பொருட்டுச் சமர்ப்பிப்பதற்கு அதிபரே பொறுப்புடையவராவார்.

5.2. அமைய மற்றும் சுகயீன விடுமுறைகளின் மொத்த எண்ணிக்கை 60 அல்லது அதனை விடக் குறைவாக இருத்தல் வேண்டும்.

7.2. தகைமை கொண்ட ஆசிரியர்கள் தமது விருப்பத்துக்கு அமைய இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துக்கு அமைய பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அதிபருக்கு 2013.05.20 ஆந் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும். இதன் பின்னர் இணைப்பு இல: 02 இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கைக்கு ஏற்ப மதிப்பீட்டினைச் செய்து பாடசாலை மட்டத்தில் தேர்வுசெய்யப்பட்ட ஆசிரியர்களின் விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளை இறுதி மதிப்பீட்டினை வலயத்தில் மேற்கொள்வதற்கு, பாடசாலைக்குப் பொறுப்பான கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் அல்லது பிரதிக் கல்விப்பணிப்பாளரிடமோ அல்லது

உதவிக் கல்விப்பணிப்பாளரிடமோ, இறுதி மதிப்பீடு மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பாடசாலையாயின் வலயக் கல்விப்பிணிப்பாளரிடமோ 2013.06.03 ஆந் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும்.

8.5. அவ்வாசிரியர்கள் 45 பேர்களிடையே அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கு அமைய ஒரு பாடசாலை வகையில் இருந்து ஒரு பிரிவுக்கு ஒரு ஆசிரியர் வீதம் பாடசாலை வகைகள் ஐந்திற்காகவும் மூன்று பிரிவுகளில் இருந்தும் 15 ஆசிரியர்களை கோட்டமட்டத்தில் தேர்ந்தெடுத்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள் 15 பேர்களின் விபரங்கள் கொண்ட பெயர்ப்பட்டியல், (இணைப்பு 05 இற்கு அமைய) மதிப்பீட்டுப் படிவம் மற்றும் விண்ணப்பப் படிவம் என்பவற்றை உறையொன்றினுள் இட்டு முத்திரை பதித்து கோட்டத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு 2013.07.01 ஆம் தினமன்று அல்லது அதற்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

9.5. இதற்கமைய நாட்டின் சகல வலயங்களிலிருந்தும் 15 ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுத்து இணைப்பு இலக்கம் 5 கொண்ட மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு 2013.07.22 ஆந் தினத்துக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். ஆசிரிய விண்ணப்பப் படிவம் மற்றும் மதிப்பீட்டுப் படிவம் உள்ளிட்ட சகல ஆவணங்களும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியதுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலை பரிந்துரை செய்து கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி) இற்கு 2013.08.05 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

10.5. மாவட்டத்தில் உயர்ந்தபட்சம் 15 ஆசிரியர்கள் வீதம் தேர்ந்தெடுத்து இணைப்பு இல. 05 கொண்ட மாதிரிப் படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலை மாவட்ட மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு 2013.07.22 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். இதனுடன் ஆசிரிய விண்ணப்பப் படிவம் மற்றும் ஆசிரிய மதிப்பீட்டுப் படிவங்கள் சகலதும் உள்ளிட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக இவ் ஆவணங்களை மகாணக் கல்விப் பணிப்பாளர் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

10.6. மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வலய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய கௌரவ விருது பெறுவோரின் பெயர்ப் பட்டியலுடன் மாவட்ட அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய கௌரவ விருது பெறுவோரின் பெயர்ப் பட்டியலைப் பரிந்துரை செய்து 2013.08.05 ஆந் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி) இற்கு அனுப்ப வேண்டும்.

12.2. மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அரச பாடசாலைகளின் அதிபர்களினால் இணைப்பு இல. 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 2013.05.10 ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

14.3. பாடசாலைக்குச் சென்று 15 அதிபர்களையும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதன் பின்னர் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைக்கு அமைய 10 அதிபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் விபரங்கள் கொண்ட பெயர்ப்பட்டியல் இணைப்பு இல. 05 இற்கு அமைய வலயத் தேர்வுக் குழுவுக்கு 2013.06.24 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதனுடன் உரிய விண்ணப்பப் படிவங்கள், மதிப்பீட்டுப் படிவங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் அனைத்தையும் வலயத் தெரிவுக் குழுவிடம் கையளித்தல் வேண்டும்.

14.8. இதற்கமைய நாட்டின் சகல வலயங்களிலும் உயர்ந்தபட்சம் ஐந்து அதிபர்கள் வீதம் தேர்ந்தெடுத்து இணைப்பு இல. 05 கொண்ட மாதிரிப் படிவத்திற்கு அமையப் பூர்த்தி செய்து வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு 2013.07.22 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். அதிபர்கள், விண்ணப்பப் படிவம் மற்றும் மதிப்பீட்டுப் படிவம் உள்ளிட்ட சகல ஆவணங்களையும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் தேவையான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

14.9. மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலைப் பரிந்துரை செய்து கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி) இற்கு 2013.08.05 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

(இணைப்பு இலக்கம் 05 இல் தேர்வானவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம், பாடசாலையின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றை குறித்த விசேட அடைப்பினுள் தெளிவாகக் குறிப்பிடுவதுடன் அவர்களது தொலைபேசி இலக்கத்தையும் தவறாது குறிப்பிடவேண்டும்)

இதற்கு மேலதிகமாக கீழ்வரும் பந்திகளையும் உட்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

## 15.0 விசேட திறன் கொண்ட ஆசிரியர்களையும், அதிபர்களையும் தெரிவுசெய்தல்.

கல்வித் தொகுதியினுள் பூரண அறிவுத் திறன்களுடன் தொகுதிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினைப் பெற்றுத்தந்து, சிறந்த ஆளுமையுடன் கூடிய மாணவர் பரம்பரையினை உருவாக்குவதற்கு பெறுமதிமிக்க சேவையிலீடுபடுவதோடு பொதுவான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு புறம்பாக கல்வித் தொகுதியினை மேலும் விரிவுபடுத்தி புதிய பாதைகளைத்தேடி ஆக்கபூர்வமான, ஆய்வுபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டு சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் விசேட திறன்களைக்காட்டி கல்வித்தொகுதிக்கு கீர்த்தியைப் பெற்றுக் கொடுத்த ஆசிரியர் அதிபர்களிடையே தெரிவுசெய்யப்பட்டோரை தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்வதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

15.1 இவ்விசேட திறன் கொண்ட ஆசிரியர், அதிபர்களைத் தெரிவு செய்வதற்காக விசேட தகைமைகள் அல்லது நிபந்தனைகள் வழங்கப்படமாட்டாது என்பதோடு இத்தெரிவுகள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள் மூலம் செய்யப்படுதல் வேண்டும்..

15.2 மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உரிய கல்வி அதிகாரிகளின் கருத்துக்கள் அறியப்பட்டு இதன்பின் ஒரு மாகாணத்திலிருந்து மேற்குறிப்பிட்டபடி விசேட திறன் கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் 06 பேரைத் தெரிவு செய்தல் வேண்டும். இவ்வாறு 09 மாகாணங்களிலிருந்தும் 54 பேரைத் தெரிவுசெய்து கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் (கல்விப் பண்புசார் விருத்தி) அவர்களுக்கு 2013.07.01 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

15.3 மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டவர்கள் 06 பேர்களினதும் திறன்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றும் அத்துடன் உரிய திறன்களை உறுதிசெய்வதற்கு தேவையானவற்றையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

15.4 கல்விச்செயலாளர் மூலம் நியமிக்கப்படும் 05 பேர்களைக்கொண்ட குழுவொன்றின் மூலமாக இறுதித்தேர்வு நடாத்தப்படும்.

15.5 இதன்படி தேசியமட்ட மதிப்பீட்டிற்காக இறுதியில் ஆசிரியர் மற்றும் அதிபர்களிடையே இருந்து 25 பேர் தெரிவுசெய்யப்படுவர்.

மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அதிசிறந்த ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

எஸ்.யூ.விஜேரத்ன,
மேலதிக செயலாளர்,
(திட்டமிடல் மற்றும் கொள்கை அமுலாக்கல்)
பதிற்கடமை செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்.
2. தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்.
3. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.
4. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்.
5. கல்வி அமைச்சின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்.
6. கல்வி அமைச்சின் சகல பிரிவுப் பொறுப்பாளர்கள்.